**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**M.C.OP.No.81/2022- PW-2**

| Name | திரு.ராஜேஷ்குமார் | District | வேலூர் |
|---|---|---|---|
| Father Name | திரு.செல்வக்குமார் | Occupation | -- |
| Village /Area | மூங்கிலேரி கிராமம் | Age | 34 |
| Taluk | காட்பாடி | Aadhar Card No. | 9775 9090 0158 |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of **02.12.2025.**

**முதல் விசாரணை:**

நான் MCOP.No.61/2022-ல் மனுதாரர் ஆவேன். நான் இன்று தாக்கல் செய்யும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துகள் என்னுடைய கையெழுத்துகள் தான். அந்த நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்னால் என் வழக்கறிஞருக்கு சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். விபத்து பதிவேடு உண்மை நகல் **ம.சா.ஆ.11** ஆகும். சிடி ஸ்கேன் அறிக்கை **ம.சா.ஆ.12** ஆகும். சங்கரி மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்று வந்ததற்கான ரூ.10,717/-க்கான மருத்துவ பில்கள் **ம.சா.ஆ.13** ஆகும். என்னுடைய ஆதார் அடையாள அட்டை நகல் **ம.சா.ஆ.14** ஆகும். மனுப்படி உத்தரவாக வேண்டிக்கொள்கிறேன்.

**2-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

விபத்து சம்மந்தமாக நான் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் மனுவின் அடிப்படையில் ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையில் உள்ள சங்கதிகள் தவறு. அந்த முதல் தகவல் அறிக்கையிலுள்ள சங்கதிகள் தவறு என என்னுடைய மனுவில் சொல்லியிருக்கிறேன். விபத்து சமயத்தில் நான் எங்கள் ஊரிலுள்ள முருகப்பா கம்பெனியில் வேலை செய்து வந்தேன். தற்போதும் அதே கம்பெனியில் தான் வேலை செய்து வருகிறேன். வேலூர் காவல் கண்காணிப்பாளருக்கு நான் புகார் மனுவை நேரடியாக கொடுத்தேன். அந்த புகார் மனுவை பெற்றுக்கொண்டதற்கு காவல் துறையில் ரசீது கொடுத்தார்கள். அந்த ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் காவல் துறை கண்காணிப்பாளரிடம் கொடுத்த புகார் மனுவின்

பேரில் என்னை விசாரித்தார்கள். மேல்நடவடிக்கை எடுக்கவில்லை. விபத்து நடந்த சாலை தேசிய நெடுஞ்சாலை என்றால் சரிதான். விபத்தில் இறந்த முருகன் என் மனைவியின் அக்கா கணவர். விபத்து நடந்த அன்று முருகன் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிளில் பின்னால் அமர்ந்து சென்றேன். சென்னையிலிருந்து சித்தூர் நோக்கி முதல் எதிர்மனுதாரருக்கு சொந்தமான கார் சென்ற போது முருகன் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிள் சித்தூர் திசையிலிருந்து திருவலம் நோக்கி வந்தது என்றால் சரிதான். ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கையில் விபத்து சமயத்தில் முருகன் மோட்டார் சைக்கிளை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று பேருந்தை முந்திச் செல்ல முயன்ற போது எதிரே வந்த கார் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் அதில் தவறாக சொல்லப்பட்டுள்ளது. விபத்தில் முருகனுக்கு தலையில் அடிபட்டது என்றால் சரிதான். காயம்பட்ட முருகனை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்த பிறகு தான் இறந்தார். நான் முருகப்பா கம்பெனியில் 2011–ம் ஆண்டிலிருந்து வேலை செய்து வருகிறேன். அந்த முருகப்பா கம்பெனியில் வேலை செய்து வந்ததையும், மாத சம்பளம் பெற்றதையும் காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் இது நாள் வரை தேவையில்லாமல் விடுமுறை எடுத்ததில்லை. விபத்தில் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கு காயம் ஏற்பட்டதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முருகன் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்று எதிர் திசையில் வந்த 1–ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான காரில் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மனுவில் எதிர் திசையில் வந்த வாகனம் மோதியதில் விபத்து ஏற்பட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். முருகன் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிளின் காப்பீடு நிறுவனத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். முருகனின் கவனக்குறைவினால் விபத்து ஏற்பட்டுள்ளதாலும், முருகன் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிளின் காப்பீடு நிறுவனத்தை தரப்பினராக சேர்க்காததாலும் 2–ம் எதிர்மனுதாரர் நிறுவனத்திடம் நான் இழப்பீடு கோர முடியாது என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீடு தொகை மிகவும் அதிகமானது என்றாலும், இந்த மனு 2–ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:–</u>** இல்லை

BALAKRISHNAN Digitally signed by BALAKRISHNAN Date: 2025.12.02 14:29:19 -0500

I Additional District Judge,
Ranipet.